வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4418 / ஆ4 / 2022 நாள் – 10–2022

பொருள் பள்ளிக் கல்வித் துறை – இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்வுகள் மார்ச் / ஏப்ரல் 2023 – புதிய தேர்வு மையங்கள் அமைத்தல் கருத்துருக்கள் அனுப்ப கோருதல் சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை) அவர்களின் கடித ந.க.எண் . 020804 / பி 3 / 2022 நாள் 13–10–2022

.....

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி நடப்புக் கல்வியாண்டு 2022–2023 இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்வுகளுக்குரிய புதிய தேர்வு மையங்கள் அமைத்தல் தொடர்பான கருத்துருக்கள் கீழ்க்குறிப்பிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி மூன்று நகல்களில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு அனுப்பி வைக்க சார்ந்த அரசு , நகரவை , ஆதிதிராவிட நலம், நிதியுதவிப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மட்டும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மெட்ரிக் பள்ளிகளை பொறுத்த வரையில் வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) அவர்களிடம் கருத்துருக்கள் மூன்று நகல்களில் ஒப்படைக்குமாறு சார்ந்த மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 2022ம் ஆண்டு இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் (பத்தாம் வகுப்பு) பொதுத் தேர்விற்காக ஓராண்டிற்கு மட்டும் தேர்வு மையம் அமைக்க அனுமதிக்கப்பட்ட பள்ளிகள் தொடர்ந்து தேர்வு மையமாக செயல்படவேண்டும் எனில் (சென்ற ஆண்டு வழங்கப்பட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை / நிபந்தனைகளை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின்) மீண்டும் கருத்துருக்கள் அனுப்பி இயக்குநரிடமிருந்து ஆணை பெறப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. எக்காரணம் கொண்டு கருத்துருக்கள் பழைய படிவங்களில் பூர்த்தி செய்து அனுப்பக் கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும்.

புதிய தேர்வு மையங்கள் அமைக்க விண்ணப்பிக்கும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசாணையில் உள்ள விதிகளின்படி தேர்வு மையங்களாக செயல்பட தகுதியுள்ளதை உறுதி செய்த பின் விண்ணப்பிக்க

வேண்டும். அவ்வாறு தகுதியில்லாத பள்ளிகள் விண்ணப்பிக்க கூடாது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிற்சேர்க்கை அ மற்றும் ஆ மற்றும் படிவம் 1 மற்றும் 2 படிவங்களை சரியான முறையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்) அவர்கள் தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து வகை பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் புதிய தேர்வு மையங்கள் வழங்க கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால் அக்கருத்துருக்களின் மீது தனி கவனம் செலுத்தி நேரடி பார்வை அறிக்கையுடன் அங்கீகாரம் மற்றும் தொடர் அங்கீகாரம் பெற்ற நகலுடன் இரண்டு நகல்களில் கருத்துருக்களை பரிந்துரையுடன் 26-10-2022 அன்றுக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு

1. அரசாணை
2. பிற்சேர்க்கை அ மற்றும் ஆ
3. படிவங்கள் 1 மற்றும் 2

(ஓம்). க. முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)
வேலூர் மற்றும்
மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)
வேலூர் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

நகல்
அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பலாகிறது.

குறிப்பு
பள்ளிகளிலிருந்து நேரடியாக முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு கருத்துருக்கள் அனுப்பகூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.